සියලුම හිමිකම් ඇවිරිණි/ முழுப் பதிப்புரிமையுடையது / All Rights reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

தரம் 09 | முதலாம் தவணைப் பரீட்சை - 2019 | 12 T

சுட்டெண் .......................................

# சைவநெறி

**நேரம் 2 மணித்தியாலம்**

## பகுதி I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1. ஆலமர் செல்வன் எனப் போற்றப்படும் கடவுள்.
   1. விஷ்ணு 2. விநாயகர் 3. முருகன் 4. சிவபெருமான்

2. படைத்தல் தொழிலைச் செய்பவர்
   1. பிரம்மா 2. உருத்திரன் 3. விஷ்ணு 4. மகேஸ்வரன்

3. செங்கணானும் பிரமனும் என்ற பாடலைப் பாடியவர்
   1. சம்பந்தர் 2. சுந்தரர் 3. நாவுக்கரசர் 4. மாணிக்கவாசகர்

4. துஞ்சலும் துஞ்சல் இலாத போதினும் என்ற தேவாரத்தின் பண்
   1. கௌசிகம் 2. காந்தார பஞ்சமம் 3. நட்ட பாடை 4. பழம் பஞ்சுரம்

5. துறவுக்கு ஆயத்தமாகும் நிலை
   1. பிரம்மச்சரியம் 2. கிருகஸ்தம் 3. சந்நியாசம் 4. வானப்பிரஸ்தம்

6. பிதிர் கடன் நிறைவேற்றும் தலங்களில் ஒன்று
   1. கீரிமலை 2. கேதீச்சரம் 3. நல்லூர் 4. கோணேஸ்வரம்

7. இறந்த தாய்க்கு பிதிர் கடன் செய்வது
   1. ஆடி அமாவாசை 2. பங்குனி உத்தரம் 3. சித்திரை பௌர்ணமி 4. வைகாசி விசாகம்

8. செல்விருந்தோம்பா வரு விருந்து..................... எனப் பாடியவர்
   1. திருவள்ளுவர் 2. நாவலர் 3. திருமூலர் 4. கண்ணப்பநாயனார்

9. சொற்றுணை வேதியன் என்ற தேவாரத்தை பாடியவர்
   1. சுந்தரர் 2. சம்மந்தர் 3. நாவுக்கரசர் 4. மாணிக்கவாசகர்

10. சிவபெருமான் மன்மதனை எரித்த தலம்
    1. திருக்குறுக்கை 2. சிதம்பரம்
    3. திருப்பாண்டி கொடி முடி 4. திருநல்லூர் பெருமணம்

11. உள்ளத்திற்கு ஒளிதரும் விளக்கு 2
    1. வீட்டினுள் ஏற்றப்படும் விளக்கு 2. ஞானிகளால் பேசப்பெறும் மெய்மொழி
    3. சூரியன், சந்திரன், அக்கினி 4. நமசிவாய என்னும் திருவைந்தெழுத்து

12. நட்சத்திரங்களின் எண்ணிக்கை
    1. ஏழு 2. பன்னிரெண்டு 3. ஒன்பது 4. இருபத்து ஏழு

13. பட்சங்களின் எண்ணிக்கை
    1. இரண்டு 2. ஐந்து 3. ஆறு 4. ஏழு

14. “யாவர்க்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி” என்று கூறியவர்
1. திருமூலர் 2. நாவுக்கரசர் 3. சம்பந்தர் 4. சுந்தரர்

15. சம்பந்தர் பாடிய திருமுறைகள்
1. 4ம், 5ம், 6ம் திருமுறை 2. 8ம் திருமுறை
3. 1ம், 2ம், 3ம் திருமுறை 4. 7ம் திருமுறை

16. சைவ நெறியில் மேலானதாக மதிக்கப்படுவது
1. அறிவு 2. கலை 3. துறவு 4. அன்பு

17. சகிப்புத் தன்மையை எடுத்துக்காட்டும் மகாபாரத கதாப்பாத்திரம்
1. தருமர் 2. பீமம் 3. நகுலன் 4. சகாதேவன்

18. காளத்தியப்பருக்கு தமது கண்களை கொடுத்தவர்
1. நாணன் 2. காடன் 3. சிவகாசரியார் 4. கண்ணப்பர்

19. பின்வருவனவற்றுள் நட்சத்திரமல்லாதது.
1. சுவாதி 2. கேட்டை 3. பூரம் 4. விருச்சிகம்

20. சமயம் சார்ந்தும் சமூகம் சார்ந்தும் விருந்துடன் கொண்டாடப்படுவது
1. பண்டிகை 2. விரதம் 3. வழிபாடு 4. யாத்திரை

## பகுதி II

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **முதலாம் வினா உட்பட மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. பின்வரும் திருப்பாடல்களுள் இரண்டினை வரிக்கிரமமாக அடிமுறை பிழையாது எழதுக. பாடியவர் பெயர், பாடப்பட்ட தலம் என்பவற்றையும் எழுதுக.
    1. துஞ்சலும் துஞ்சல் இலாத..........
    2. காதலாகி.........
    3. இல்லக விளக்கது............
    4. காப்பதோர் வில்லும் அம்பும்......... (6x2=12 புள்ளிகள்)

02. 1. மனித வாழ்க்கையின் நான்கு படி நிலைகளும் எவை?
    2. இல்லரத்தார் செய்யும் பிதிர் வழிபாடுகள் மூன்று எழதுக.
    3. தென் புலத்தார் யார்? அவர்கள் அவ்வாறு அழைக்கப்படுவதற்கு காரணம் யாது?
    4. விருந்தோம்பல் தொண்டினால் மேன்மையுற்ற நாயன்மார்கள் யாவர்?

(12 புள்ளிகள்)

03. 1. பஞ்சாங்கம் கொண்டுள்ள அங்கங்கள் எவை?
    2. தனிமனித வாழ்வில் பஞ்சாங்கம் செல்வாக்கு செலுத்தும் சந்தர்ப்பங்கள் மூன்று எழுதுக.
    3. திதி என்றால் என்ன? திதிகள் எத்தனை?
    4. வாரம் என்பது எதனைக் குறிக்கின்றது? சூரியனுக்கு உரிய நாள் எது?

(12 புள்ளிகள்)

04. 1. “காதலாகி” என்ற தேவாரம் பாடப்பட்ட சந்தர்ப்பம் யாது?
    2. இத்தேவாரத்தில் நமசிவாய மந்திரத்தின் சிறப்புகளாகக் குறிப்பிடப்படுபவை யாவை?
    3. காப்பதோர் வில்லும் அம்பும்.......... என்ற தேவாரம் யாரால் எச்சந்தர்ப்பத்தில் எத்தலம் மீது பாடப்பட்டது?
    4. “காப்பதோர்”............. என்ற தேவாரத்தில் விவரிக்கப்பட்டுள்ள அடியார் யார்? அவர் இறைவன் மீது கொண்ட அன்பின் வலிமையை எடுத்துக் காட்டும் செயல் யாது?

(12 புள்ளிகள்)

05. 1. பிரமாவினதும் விஷ்ணுவினதும் தொழில்கள் எவை?
    2. திருக்கார்த்திகை விளக்கீட்டு விழா எங்கே சிறப்பாக கொண்டாடப்படுகிறது?
    3. இலிங்கோற்பவ மூர்த்தம் எதனை உணர்த்துகின்றது?
    4. சிவராத்திரி எந்த மாதத்தில் எந்த கடவுளுக்கு அனுஷ்டிக்கப்படுகிறது?

(12 புள்ளிகள்)

06. பின்வரும் இரண்டிற்கு சிறு குறிப்பு எழுதுக.
    1. கூட்டுப் பொறுப்பு
    2. விருந்தோம்பல்
    3. சகிப்புத் தன்மை
    4. அயனும் மாலும்

(12 புள்ளிகள்)

**வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்**
**முதலாம் தவணைப் பரீட்சை - 2019**
**தரம் 09 - சைவநெறி**
**விடைப்பத்திரம்**

**பகுதி I**

| | | | |
|---|---|---|---|
| 1. 4 | 6. 1 | 11. 4 | 16. 4 |
| 2. 1 | 7. 3 | 12. 4 | 17. 1 |
| 3. 3 | 8. 1 | 13. 1 | 18. 4 |
| 4. 2 | 9. 3 | 14. 1 | 19. 4 |
| 5. 3 | 10. 1 | 15. 3 | 20. 1 |

**பகுதி II**

01. பாட நூலில் பார்க்கவும்

02. 1. பிரம்மச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம்
2. அந்தியேட்டி, சிரார்த்தம், ஆண்டுத்திவசம், மகாளயம்
3. இறந்துபோன மூதாதையர்களை நாம் தென்புலத்தார் என்று போற்றுவோம்.
4. இளையான்குடி மாறநாயனார், காரைக்கால் அம்மையார்

03. 1. வாரம், திதி, நட்சத்திரம், கரணம், யோகம்.
2. நாம் அனுட்டிக்கும் விரதங்கள், நமது கோவில்கள் இடம்பெறும் உற்சவங்கள், நமதுமுன்னோர்கள் நினைவு கூர்ந்து செய்யப்படும் அபரக்கிரியைகள், புதுமனை பூவிழா.
3. திதி என்பது பூமியை சுற்றிவரும் சந்திரனின் சுற்றுப்பாதையின் 30 சம பிரிவு ஒவ்வொன்றையும் சந்திரன் கடக்க எடுக்கும் கால அளவை குறிக்கும். திதிகள் 30.
4. வாரம் என்பது ஞாயிறு முதல் சனி வரை உள்ள 7 தினங்களைக் குறிக்கிறது.

04. 1. சம்பந்தர் திருமணத்தின் போது அத்தினத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானை வணங்கி திருவந்தெழுத்தின் பெருமையை உலகினர்க்கு உணர்த்தும் வகையில் பாடப்பட்டது.
2. மிகுந்த அன்புடன் மனம் கசிந்து உருகி கண்ணீர் பெருக ஓதுபவர்களை நந்நெறிக்கு உய்த்தருளுவது, நாள் வேதங்கள் உண்மைப் பொருளாக விளங்குவது.
3. நாவுக்கரசரால், சந்தர்ப்பம் - திருநாவுக்கரசர் திருக்குருக்கை என்ற தளத்தை அடைந்து அங்கு வீற்றிருக்கும் பெருமான்மேல் பாடப்பட்டது. தலம் - திருக்குறுக்கை வீரட்டம்
4. கண்ணப்பர். அவர் இறைவன் மீது கொண்ட அன்பின் வலிமை சிவபெருமானது திருமுகத்திலுள்ள கண்களிலிருந்து குருதி வர தன் கண்ணை எடுத்து பிரானின் கண்ணுக்கு பதிலாய் அப்புவதற்கு அம்பினால் தன் கண்ணை தோண்ட முற்பட்டது.

05. 1. பிரம்மா - படைத்தல், விஷ்ணு - காத்தல்
2. திருவண்ணாமலை
3. இலிங்கோற்பவ மூர்த்தம், மாலும் அயனும் காணமுடியாதவாறு இறைவன் சோதிப்பிழம்பாகத் தோன்றியருளிய அருட் செயலை உணர்த்துகிறது.
4. மாசிமாதம் சிவபெருமானுக்கு

06. பாட நூலில் பார்த்து புள்ளி வழங்கவும்